# நியூ பாரத் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி, திருவாரூர்.

**வகுப்பு: ஐந்தாம் வகுப்பு** **பாடம்: தமிழ்**

**இயல்-1 : தமிழின் இனிமை**

**அ) சரியான விடை:**

1. "கழை" - இச்சொல் உணர்த்தும் சரியான பொருள்
   கரும்பு
2. கனியிடை இச்சொல்லை பிரித்து எழுத் கிடைப்பது
   கனி + இடை
3. பனி + மலர் என்பதைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்
   பனிமலர்

**ஆ) பிரித்து எழுதுக:**

அ) கழையிடை = கழை + இடை

ஆ) என்னுயிர் = என் + உயிர்

**இ) பொருத்துக:**

1. பால் - பசு
2. இளநீர் - தென்னை
3. சாறு - கரும்பு
4. பாகு - வெல்லம்

**ஈ) ஒரே ஓசையுடைய சொற்கள்:**

கனியிடை, கழையிடை, பாகிடை, பாலும், தேனும், நீரும், சுவையும்

**உ) இரண்டாம் எழுத்து ஒன்று போல் வரும் சொற்கள்:**

கனியிடை, பனிமலர், நனிபசு, இனியன, எனினும், தென்னை, என்னுயிர், என்பேன்

**ஊ) பாடலில் வரும் வருணனைச் சொற்கள்:**

தென்னை, தேன், வெல்லப்பாகு, பால்

**எ) வினா - விடை:**

1. பாரதிதாசன் எவற்றையெல்லாம் இனியன என்று கூறுகிறார்?

   | | |
   |---|---|
   | பலாச்சுளை | கரும்புச்சாறு |
   | தேன் | பாகு |
   | பசுவின்பால் | இளநீர் |

2. பாரதிதாசன் எதனை என்உயிர் என்று கூறுகிறார்?
   பாரதிதாசன் "தமிழே" என்உயிர் என்கிறார்.

**சிந்தனை வினா:**

பாரதிதாசன் சிலவற்றை இனியன என்று கூறுகிறார்? உனக்கு எவையெல்லாம் இனிமையானவை? ஏன்?

மாம்பழம், கற்கண்டு, தேன், வாழைப்பழம், நுங்கு ஆகியவை எல்லாம் எனக்கு இனிமையானவை. ஏனென்றால் இவை அனைத்தும் சுவையும், இயற்கை இனிமையும் உடையவை.

**கூடுதல் வினா:**

1. பாரதிதாசனின் இயற்பெயர் யாது?
   கனகசுப்புரத்தினம்
2. பாரதிதாசன் பிறந்த ஊர் எது?
   புதுச்சேரி
3. பாரதிதாசன் - பெயர்க் காரணம் தருக.
   பாரதியார் மீது கொண்ட பற்றினால், கனக சுப்புரத்தினம் என்ற தம் இயற்பெயரைப் பாரதிதாசன் என மாற்றி அமைத்துக் கொண்டார்.

**இயல்-1**

**உரைநடை - அறிவா? பண்பா? பட்டிமன்றம்**

அ) சரியான விடை:

1. நற்றமிழ் - இச்சொல்லை பிரித்து எழுதக் கிடைப்பது.
   நன்மை + தமிழ்
2. உலகம் என்னும் பொருளைக் குறிக்காத சொல்
   வானம்
3. அறிவு + ஆயுதம் என்பதை சேர்த்தெழுதக் கிடைக்கும் சொல்
   அறிவாயுதம்
4. புகழ் - இச்சொல்லின் எதிர்ச்சொல்
   இகழ்
5. வெளிச்சம் - இச்சொல்லைக் குறிக்காத சொல்
   இருள்

**ஆ) பிரித்து எழுதுக:**

1. செந்தமிழ் = செம்மை + தமிழ்
2. கவியரங்கம் = கவி + அரங்கம்

**இ) வினா - விடை:**

1. அறிவால் உயர்ந்தவர்களாக இன்சுவை யார் யாரைக் குறிப்படுகின்றனர்?
   அப்துல் கலாம் தாமஸ் ஆல்வா எடிசன்

2. பண்பால் சிறந்தவர்களாக மதியொளி எவரையெல்லாம் குறிப்பிடுகிறார்?
   புத்தர் திருவள்ளுவர்

3. உயிர் காக்கும் நெல்லிக்கனியை யார் யாருக்குக் கொடுத்தார்?
   உயிர் காக்கும் நெல்லிக்கனியை அதியமான் ஔவையாருக்குக் கொடுத்தார்.

4. நடுவர் கூறிய தீர்ப்பை உன் சொந்த நடையில் கூறுக.
   அறிவும், பண்பும் கண்ணின் இரு விழிகள் போன்றவை. ஐம்பொறிகள் பண்பாகவும், உலகம் முழுவதும் அறிவாகவும் கொண்டு நாம் செயல்பட வேண்டும். எனவே இவை இரண்டுமே சிறப்பு என்று நடுவர் தீர்ப்பு கூறினார்.

**ஈ) சிந்தனை வினா - விடை:**

1. கல்வி, செல்வம், வீரம் இவற்றுள் எது சிறந்தது என நீ கருதிகிறாய்? ஏன்?

   கல்வி, செல்வம், வீரம் இவற்றுள் கல்வியே சிறந்தது. ஏனென்றால் செல்வம்

அழிந்து விடும். வீரம் வயதானால் குறைந்து விடும். அழியாமல் குறையாமல் இருப்பது கல்வி மட்டுமே! எனவே கல்வியே சிறந்தது என்பேன்.

2. ”வெறும் பண்பை வைத்துக்கொண்டு பெரும் பந்தல் போடலாமே? - இத்தொடருக்கான பொருளை உம் சொந்த நடையில் வகுப்பறையில பகிர்ந்து கொள்க.

   பண்பை மட்டும் வைத்துக் கொண்டு கீற்றுப் பந்தல் போட முடியாமல் போகலாம். ஆனால் வாழ்க்கைப் பந்தல் போடலாம்.

**வினா - விடை:**

1. ஐம்பொறிகளுள் ஒன்று கொடுக்கப்பட்டுள்ளது மற்ற நான்கையும் எழுதுக.
   கண், காது, வாய், மூக்கு, மெய் (உடல்)

2. தமிழைச் சிறப்பிக்கும் பெயர்களைப் பாடப்பகுதியிலிருந்து எடுத்தெழுதுக.
   செந்தமிழ், செகம் போற்றும் தமிழ், நறுந்தேன், முத்தமிழ், நற்றமிழ்

**கூடுதல் வினா - விடை:**

1. சொல்லழகி என்று பொருள் நடுவரால் குறிப்பிடப்படுபவர் யார்?
   சலீமா
2. ”அக்னி” தந்தவர் யார்?
   அப்துல் கலாம்
3. பட்டிமன்றத் தலைப்பு யாது?
   அறிவா? பண்பா?
4. பட்டிமன்றத்தில் பங்கேற்ற மாணாக்கர் யாவர்?
   இன்சுவை, அருளப்பன், மதியொளி, சலீமா

**செயல்திட்டம்:**

நாட்டின் வளர்ச்சியில் பெரும் பங்கு வகிப்பவர்கள் நல்லவர்களா? வல்லவர்களா? என்ற தலைப்பில் விவாதம் நடத்துக.

## இயல்-1: துணைப்பாடம் - என்ன சத்தம்

**வினா - விடை:**

1. செழியன் ஆடுகளைக் காட்டிற்கு ஓட்டிச் செல்லக் காரணம் என்ன?

   ஞாயிற்றுக்கிழமை பள்ளிக்கு விடுமுறை என்பதால், செழியன் தன் பாட்டியுடன் ஆடுகளை மேய்ச்சலுக்காக காட்டிற்கு ஓட்டிச் சென்றான்.

2. செழியன் செய்தவற்றை உமது சொந்த நடையில் கூறுக.

   காட்டில் ஆடுகளை மேய விட்டு விட்டு ஒரு மரத்தடியில் அமர்ந்து இயற்கை அழகை இரசித்துக் கொண்டு இருந்தான். திடீரென ஆடுகள் கத்தத் தொடங்கின. செழியன் எழுந்து சென்று பார்த்தான். புதர் அருகே நரி ஒன்று ஆடுகளை கொன்று தின்ன நேரம் பார்த்துக் கொண்டு இருந்தது. செழியன் அருகில் இருந்த குச்சியை வில்லாக்கி நரியை நோக்கி அம்பை எய்தான். அடிபட்ட நரி ஓடிவிட்டது.

**சிந்தனை வினா:**

1. நம்மைப்போல் விலங்குகளுக்கும் பேசும் திறன் கிடைத்தால் எப்படி இருக்கும்? காட்டில் வாழும் விலங்குகள் பேசுவது போல் ஓர் உரையாடல் எழுதிக் காட்டுக.

| | |
|---|---|
| மான் : | ஏய் எல்லாம் ஓடுங்க, ஓடுங்க சிங்கம் வருது ஓடுங்க |
| முயல் : | என்ன மான் அக்கா சொல்றீங்க? |
| மான் : | அட குட்டிப் பயலே! உண்மையைத்தான் சொல்றேன். ஔிஞ்சுக்கோ! |
| முயல் : | சரி மான் அக்கா. |
| சிங்கம்: | ஏய்! எல்லாரும் எங்க ஓடுறீங்க? நில்லுங்க, ஏய்! நில்லுங்க. |
| மான் : | நிக்கமாட்டாம்! நீ எங்களை தின்னுடுவ! (என்று சொல்லி ஓடியது) |

2. நீங்கள் செல்லமாக வளர்க்கும் நாய், பூனை போன்ற விலங்குகள் ஏதேனும் ஆபத்து நேர்வதற்கு முன்பு ஏன் ஒலியெழுப்புகிறது என எப்போதாவது நீங்கள் சிந்தித்ததுண்டா?

   சிந்தித்தது உண்டு. ஒரு நாள் எங்கள் வீட்டு நாய் நடு இரவில் மிகவும் குரைத்தது. அப்போது தான் திருடன் வந்ததை அறிந்தோம்.

## இயல்-1: கற்கண்டு - மரபுச் சொற்கள்

1. மரபு என்றால் என்ன?

நம் முன்னோர்கள் எப்பொருளை எச்சொல்லால் எவ்வாறு வழங்கினார்களோ, அப்பொருளை அச்சொல்லால் அவ்வாறே வழங்குவது மரபு.

2. பாடப்பகுதியில் எத்தனை வகையான மரபுச் சொற்கள் இடம் பெற்றுள்ளன?

ஒலி மரபு, இளமைப் பெயர், மரபு, வினைமரபு, உறுப்புப் பெயர் மரபு, இருப்பிட மரபுச் சொற்கள் என ஐந்து வகையான மரபுச் சொற்கள் இடம் பெற்றுள்ளன.

3. ஒலி மரபிற்கு நான்கு எடுத்துக்காட்டுகள் தருக.

| | |
|---|---|
| குயில் - கூவும் | மயில் - அகவும் |
| நாய் - குரைக்கும் | ஆடு - கத்தும் |

**செயல் திட்டம்:**

1. தமிழ்மொழி சார்ந்த எளிய பாடல்களைச் சேகரித்து எழுதி வருக.

2. சிறப்புப் பட்டிமன்றம் ஒன்றிற்கான நிகழ்ச்சி நிரல் தயார் செய்க.

# இயல் இரண்டு - செய்யுள்
# மூதுரை

**அ. சரியான விடை:**

1. என்றெண்ணி என்ற சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது : என்று + எண்ணி
2. மடை + தலை என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்: மடைத்தலை
3. வரும் + அளவும் என்பதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்: வருமளவும்
4. அறிவிலார் என்பதன் எதிர்ச்சொல் - அறிவுடையார்
5. எண்ணுதல் - இச்சொல்லுக்குரிய பொருள் - நினைத்தல்

**ஆ) பாடலில் உள்ள எதுகைச் சொற்கள்:**

| | | |
|---|---|---|
| அடக்கம் | உடையார் | வருமளவும் |
| கடக்கம் | மடைத்தலையில் | இருக்குமாம் |

இ) ”மடைத்தலை” - இச்சொல்லில் இருந்து புதிய சொற்கள் உருவாக்குக.

மடை, தலை, மலை, தடை, மதலை

**உ) வினா - விடை:**

1. கொக்கு எதற்காகக் காத்திருக்கிறது?

   கொக்கு தனக்கு இரையாக பெரிய மீன்கள் வரும்வரை அசைவின்றிக் காத்திருக்கின்றது.

2. யாரை அறிவில்லாதவர் என எண்ணிவிடக் கூடாது என ஔவையார் குறிப்பிடுகிறார்.

   தமக்குரிய காலம் வரும்வரை சிலர் அடங்கி இருப்பர். அவர்களை அறிவில்லாதவர் என எண்ணிவிடக் கூடாது.

**ஊ) சிந்தனை வினா:**

1. அடக்கமாக இருப்பவரை அறிவில்லாதவர் என்று எண்ணி வெல்ல நினைக்கக் கூடாது. ஏன்? கலந்துரையாடுக.

   அடக்கமாக இருப்பவரை அறிவில்லாதவர் என்று எண்ணி வெல்ல நினைக்கக் கூடாது. எனென்றால் அடக்கமாக இருப்பவர்கள் தனக்கு தகுந்த நேரம் வரும் வரை பொறுமையாக இருப்பர். தனக்கு ஏற்ற நேரம் வந்நதவுடன் விரைவாக செயலை முடித்து வெற்றி பெறுவார். எனவே அடக்கமாக இருப்பவரை அறிவில்லாதவர் என்று எண்ணுதல் கூடாது.

**கூடுதல் வினா:**

1. மூதுரை நூலின் ஆசிரியர் யார்?

   ஔவையார்

2. மூதுரையின் வேறுபெயர் யாது?

   ”வாக்குண்டாம்”

3. மூதுரை - சிறு குறிப்பு வரைக.

   முதுமையான அல்லது பழைமையான அறிவுரைகளைக் கொண்ட நூல்.
   இதன் வேறு பெயர்: வாக்குண்டாம்.
   ஆசிரியர் : ஔவையார்

4. ஔவையார் இயற்றிய வேறு நூல்கள்.

   1. ஆத்திச்சூடி
   2. கொன்றை வேந்தன்

## இயல் இரண்டு - உரை நடை
## கல்விச் செல்வமும் பொருட்செல்வமும்

**அ) சரியான சொல்லைத் தெரிவு செய்க:**

1. இம்மை என்ற சொல் குறிக்கும் பொருள்.
   இப்பிறப்பு
2. காரணமாகின்றது என்ற சொல்லைப் பிரிக்கக் கிடைப்பது.
   காரணம் + ஆகின்றது
3. வறுமை - இச்சொல்லுக்குரிய எதிர்ச்சொல்
   செழுமை
4. பொருள் + செல்வம் என்பதைச் சேர்த்து எழுதுக் கிடைப்பது
   பொருட்செல்வம்
5. பொருள் + இல்லார்க்கு என்பதைச் சேர்த்து எழுதுக் கிடைப்பது
   பொருளில்லார்க்கு

**ஆ) சேர்த்து எழுதுக:**

1. பழைமை + மொழி - பழமொழி
2. நன்மை + வழி - நல்வழி

**இ) பிரித்து எழுதுக:**

1. பணமென்றால் - பணம் + என்றால்
2. தொலைக்காட்சி - தொலை + காட்சி

**ஈ) தொடரை முழுமை செய்க:**

1. பசி வந்திடப் <u>பத்தும்</u> போகும்.
2. கேடில் விழுச்செல்வம் <u>கல்வி</u>
3. பொருளால் நம் வாழ்வு <u>வளம்</u> பெறும்

**உ) வினா - விடை:**

1. களர்நிலத்து ஒப்பாவர் - யார்?
   கல்வி கற்காதவரே களர்நிலத்துக்கு ஒப்பானவர் ஆவர்.
2. கள்வரால் கவர்ந்து செல்லக் கூடியது எது?
   பொருட்செல்வம் கள்வரால் (திருடர்) கவர்ந்து செல்லக் கூடியது ஆகும்.
3. ”கல்விச்செல்வமே மிகவும் சிறந்த செல்வம்” என்பதற்கு மலர்விழி கூறிய காரணங்களை உம் சொந்த நடையில் எழுதுக.

   கற்காதவன் பயன்படாத நிலம் போன்றவன்

   கல்வி கற்றவருக்கு மட்டுமே மதிப்பு கிடைக்கும்

   பொருட்செல்வம் கொடுத்தால் குறையும். திருடர்களும் திருடுவர். ஆனால் கல்வி குறையாது, திருடவும் முடியாது.

   இப்பிறப்புக்கும், மறுபிறப்புக்கும் பயன்தருவது கல்வியே - இவையே கல்விச்செல்வம் மிகவும் சிறந்த செல்வம் என்பதற்கு மலர்விழி கூறிய காரணங்கள் ஆகும்.

4. பொருட்செல்வமே மிகவும் அவசியம் என்பதற்குத் தமிழரசி கூறிய காரணங்களைத் தொகுத்து எழுதுக.

வள்ளுவரும் பொருள் இல்லாதவருக்கு உலகம் இல்லை என்கிறார்.

கல்வி கற்பதற்கும் பணம் தேவை

பணம் இல்லாதவன் பிணம்

இவையே பொருட்செல்வமே மிகவும் அவசியம் என்பதற்குத் தமிழரசி கூறிய காரணங்கள் ஆகும்.

**ஊ) சிந்தனை வினாக்கள்:**

1. கல்விச் செல்வம் அல்லது பொருட்செல்வம் இரண்டில் ஒன்று தான் உனக்கு வழங்கப்படும் எனில், நீ எதைத் தெரிவு செய்வாய்? ஏன்?

   நான் கல்விச் செல்வத்தைத் தான் வாங்குவேன். ஏன் என்றால் கல்வியால் பொருட்செல்வத்தைச் சம்பாதித்துக் கொள்ளலாம்.

2. "நம்மை மேன்மைப்படுத்துவது கல்வி" இதைப்பற்றி உன் சொந்த நடையில் பேசு.
   இப்பிறப்பில் நாம் கற்ற கல்வி ஏழு பிறப்பிலும் பயன்படும் என்கிறார் வள்ளுவர். பணத்தை இழந்தால் சம்பாதித்துக் கொள்ளலாம். ஆனால் உரிய காலத்தில் கல்வியை இழந்தால் அதைத் திரும்ப பெற இயலாது. கல்வி ஒன்று மட்டுமே ஒருவனை நல்லவனாகவும் அறிவுள்ளவனாகவும் ஆக்கும். எனவே நம்மை மேன்மைப்படுத்துவது கல்வி என்று சொல்லி என்னுரையை நிறைவு செய்கிறேன்.

**கூடுதல் வினா:**

1. கல்வி கற்காதவன் "களர் நிலத்துக்கு ஒப்பானவன்" என்று கூறியவர்.
   பாரதிதாசன்
2. இம்மைக்கும் மறுமைக்கும் பயன்தருவது எது?
   கல்வி
3. நிலையில்லா செல்வம் எது?
   பொருட்செல்வமே நிலையில்லாத செல்வம் ஆகும்
4. பணம் பற்றிய பழமொழிகள் யாவை?
   1. பணம் இல்லாதவன் பிணம்
   2. பணம் என்றால் பிணம் கூட வாயைப்பிளக்கும்.

## இயல் இரண்டு - துணைப்பாடம்
## வறுமையிலும் நேர்மை

**வினா - விடை:**

1. பசியால் வாடிய ஊர்மக்களுக்குப் பணக்காரர் எவ்வாறு உதவினார்?

   பஞ்சம் காரணமாக பசியால் வாடிய ஊர் மக்களுக்கு பணக்காரர் அவர்களின் குழந்தைகள் யாரும் பசியால் வாடக்கூடாது என்பதற்காக ஆளுக்கு ஒரு கொழுக்கட்டை கிடைக்குமாறு தன் வீட்டிற்கு வெளியே தினமும் கூடையில் தேவையான அளவு கொழுக்கட்டைகளை வைத்தார்.

2. சிறுமியின் நேர்மைக்குக் கிடைத்த பரிசு யாது?

கொழுக்கட்டைக் கூடையில் இருந்து இறுதியாக என்ன கிடைக்கின்றதோ அதைத்தான் தினமும் சிறுமி இளவேனில் எடுப்பாள். ஐந்தாம் நாள் வழக்கமான கொழுக்கட்டையை எடுத்துக் கொண்டு வீட்டுக்குச் சென்றாள். கொழுக்கட்டையை இரண்டாகப் பிளந்த போது அதனுள் தங்கக் காசு இருந்தது. அவள் பணக்காரரிடம் சென்று நடந்ததைக் கூறிப் பொற்காசைக் கொடுத்தாள். உனது பொறுமைக்கும் நற்பண்புக்கும் நான் கொடுக்கும் பரிசு இது எடுத்துச் செல் என்று கூறினார்.

**சிந்தனை வினா:**

1. ”வறுமையிலும் நேர்மை” என்னும் கதையில் சிறுமியின் இடத்தில் நீயாக இருந்தால் என்ன செய்திருப்பாய்?

நானும் சிறுமி இளவேனில் போல தங்கக் காசைப் பணக்காரரிடமே கொடுத்திருப்பேன்.

## இயல்-2: இலக்கணம்

### பெயர்ச்சொல், வினைச்சொல்

1. பெயர்ச்சொல் என்றால் என்ன? சான்று தருக.

ஒன்றன் இயற்பெயரைக் குறிக்கும் சொல் பெயர்ச்சொல் எனப்படும்.
**எ.கா.** சாந்தி, வகுப்பறை, சித்திரை, கண்

2. வினைச்சொல் என்றால் என்ன? சான்று தருக.

ஒரு செயலை (வினையை) குறிக்கும் சொல் வினைச்சொல் எனப்படும்.
**எ.கா:** ஓடினான், விழுந்தது, எழுதினான்.

## இயல் இரண்டு

**செயல் திட்டம் :**

1. செய்தித்தாள்களில் வெளிவரும் கல்வி தொடர்பான செய்திகளைத் தொகுத்தெழுதுக.

2. திருவள்ளுவர் கல்வி குறித்து கூறிய குறட்பாக்களைக் கொண்டு படத்தொகுப்பு உருவாக்குக.

## இயல் மூன்று - செய்யுள்

## பாடல் - கடல்

**அ) சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக.**

1. பெருமை + கடல் என்பதைச் சேர்த்து எழுதுக் கிடைப்பது - பெருங்கடல்
2. கருங்கடலே என்பதைப் பிரித்து எழுதக் கிடைப்பது - கருமை + கடலே
3. "திரை" என்ற சொல்லின் பொருள் - அலை
4. மழை பெய்வதற்குக் காரணமாக இருப்பது - கடல்

**ஆ. இரண்டாம் எழுத்து ஒன்றுபோல் வரும் (எதுகை) சொற்களை எழுதுக:**

கடலே - கடலே　　மலையை - விலைகொள்

பொங்கு - எங்கும்　　திரைகளோ - நிரைதாமோ

**இ. முதலெழுத்து ஒன்றுபோல் வரும் (மோனை) சொற்களைப் எழுதுக:**

மலையை - மகர　　விலைகொள் - விளையாடற்

மழைக்கு - மதித்து　　கடலே - கடலே

**ஈ. வினா - விடை:**

1. கடல் நமக்கு அளிக்கும் வரங்கள் யாவை?
   மீன்கள், முத்துகள், சிப்பிகள்

2. பாடலின் பொருளை உம் சொந்த நடையில் எழுதுக.
   - பெருங்கடலே! நீ இரவுபகல் உறங்காது அலைவீசி ஓய்வில்லாமல் இருக்கின்றாய்.
   - அலைகள் குதிரைகள் அணிவகுத்து வருவது போல் உள்ளது.
   - அலையோசையா? இடியோசையா? என ஐயம் எழுகின்றது.
   - அலைகள், மீன்கள், சிப்பிகள், முத்துகள் ஆகியவற்றைக் கொண்டது கடல்.
   - பூமியில் மழை பெய்யவும், மழைநீரைத் தேக்கும் கலமாகவும் கடல் விளங்குகிறது.
   - ஆகவே உன் பெருமைகளைச் சொல்ல வல்லவர்கள் யாரும் இல்லை.

**உ. சிந்தனை வினா:**

எல்லையறியாய் பெருங்கடல் என்று கூறக்காரணம் என்ன? வகுப்பறையில் கலந்துரையாடுக.

கடல் எல்லையற்றது, அதற்கு இதுதான் முடிவு என்று கூறமுடியாது. அது விரிந்து பரந்துள்ளது. எனவே எல்லையறியாப் பெருங்கடல் என்று கவிஞர் கூறியிருக்கின்றார்.

**கூடுதல் வினா:**

1. கவிமணி பிறந்த ஊர் எது?
   தேரூர்

2. மகரம் என்பது அதனைக் குறிக்கும்?
   மீன்
3. பொருத்துக:
   1. மகரம் - பெருமை (2)
   2. மகிமை - மீன் (1)
   3. புரவி - அலை (4)
   4. திரை - குதிரை (3)

4. பெருங்கடல் எப்படி இருக்கும்?
   பெருங்கடல் எல்லையில்லாமல் பரந்து இருக்கும்.

5. தேசிக விநாயகனார் - கவிமணி எனப் போற்றப்படுவது ஏன்?
   இனிமையும், எளிமையும் மிக்கப் பாடல்களை எழுதியமையால் தேசிக விநாயகனார், "கவிமணி" எனப் போற்றப்படுகின்றார்.

**செயல்திட்டம்:**

கடலைப் பற்றிய பாடல்களை தொகுத்து தொகுப்பேடு ஒன்றினை உருவாக்குக.

## இயல் மூன்று - உரைநடை
## படம் இங்கே! பழமொழி எங்கே?

**ஆ. சரியான சொல்லைத் தெரிவு செய்து எழுதுக:**

1. மரப்பொந்து - இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது.
   மரம் + பொந்து
2. அக்கரை இச்சொல்லைப் பிரித்து எழுதக் கிடைப்பது
   அ + கரை
3. சூறை + காற்று இதனைச் சேர்த்து எழுதக் கிடைப்பது - சூறைக்காற்று
4. கண் + இமைக்கும் இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல்-கண்ணிமைக்கும்
5. அமர்ந்து + இருந்த இதனைச் சேர்த்து எழுதக் கிடைக்கும் சொல் - அமர்ந்திருந்த

**ஆ. பிரித்து எழுதுக:**

1. மணியோசை - மணி + ஓசை
2. தேனிசை - தேன் + இசை

**இ. வினா - விடை:**

1. பழமொழி என்பது யாது?
   நம் முன்னோர்கள் தங்கள் அனுபவத்தின் மூலம் உணர்ந்து கூறிய மொழிகள் பழமொழிகள் ஆகும்.

2. விடுகதை என்றால் என்ன?
   ஒன்று அல்லது இரண்டு வரிகளில் ஒரு பொருளை மறைத்து விவரித்துக் கொடுக்கப்படும் ஒரு புதிர் விடுகதை ஆகும்.

3. கிளியை "பழமொழிக்கிளி" என அழைக்கக் காரணம் என்ன?
   மாங்காய் காய்க்கும் பருவத்தில் தோப்பிற்கு வரும் சிறுவர்களிடம் ஒரு படத்தை மரப்பொந்திலிருந்து எடுத்துக் காட்டும். அந்தப்படம் உணர்த்தும் பழமொழியைச்

சிறுவர்கள் கூறிவிட்டால் அவர்களுக்கு ஒரு மாங்காய் பறித்துப் போடும். அதனால் அதைப் ”பழமொழிக்கிளி” என்று அழைக்கின்றனர்.

4. இப்பாடலில் நீ அறிந்து கொண்ட பழமொழிகளைப் பட்டியலிடுக:
    1. யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே
    2. இக்கரைக்கு அக்கரை பச்சை
    3. ஆடிக்காற்றில் அம்மியும் பறக்கும்
    4. ஆலும் வேலும் பல்லுக்குறுதி, நாலும் இரண்டும் சொல்லுக்குறுதி
    5. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்
    6. அகல உழுவதை விட ஆழ உழுவதே மேல்

**ஈ) சிந்தனை வினா மற்றும் செயல்திட்டம்:**

கிளியைப் போல், நீ பழிமொழி கூறுவதாய் இருந்தால் என்ன பழமொழிக்கு எப்படிப் படம் வரைந்து விளக்குவாய் என்பதனை செயல்திட்டமாக செய்து விளக்குக.

**எ.கா:** கழுதைக்கு தெரியுமா கற்பூர வாசனை

**கூடுதல் வினை - விடை:**

1. பழமொழி பற்றிய நீதிநூல் எது?
   பழமொழி நானூறு
2. கிளி எங்கு இருந்தது? அதன் பெயர் யாது?
   பழையனூர் மாந்தோப்பில் இருந்தது.
   அதன் பெயர் - செல்லம்மா
3. சிறுவர்கள் தோப்பிற்கு வரக் காரணமென்ன?
   சிறுவர்கள் மாங்காய் பறிக்க தோப்பிற்கு வருவார்கள்.

## இயல் மூன்று - துணைப்பாடம்
## தப்பிப் பிழைத்த மான்

**வினா - விடை:**

1. நரி, காகத்திடமிருந்து ஏன் மானைப் பிரிக்க எண்ணியது?
   காகமும், மானும் இணைபிரியாத நண்பர்கள், அவர்களைப் பிரித்து மானைக் கொன்று தின்றுவிட வேண்டும் என எண்ணி நரி காகத்திடம் இருந்து மானைப் பிரித்தது.

2. நரியை நண்பனாக ஏற்றுக்கொண்ட மானிடம் காகம் கூறியது என்ன?
   காகம் மானிடம் ”நண்பா, யாரையும் நம்பி விடதே! அது நமக்குத்தான் ஆபத்து” என்று கூறியது. மேலும் ”கண்ணால் காண்பதும் பொய், காதால் கேட்பதும் பொய் தீர விசாரிப்பதே மெய்” என்றது.

3. நரி மானை எங்கு அழைத்துச் சென்றது?
   நரி மானை விவசாயி ஒருவரின் விளைச்சல் நிலத்திற்கு அழைத்துச் சென்றது.

4. வலையில் மாட்டிக் கொண்ட மானைக் காகம் எவ்வாறு காப்பாற்றியது?
   காகம், மானிடம் ”நண்பா, விவசாயி அருகில் வரும்வரை நீ இறந்தது போல் அசையாமல் இரு, விவசாயி உன்னை வலையில் இருந்து விடுவித்தவுடன், நான் மரத்தில் இருந்து கா, கா என்று குரல் கொடுக்கிறேன், உடனே தப்பித்து விடு என்று கூறியது. மானும் அவ்வாறே நடித்தது. விவசாயி விடுவித்தவுடன் காகம்

கரைய மான் ஓடியது.

5. ”தப்பிப் பிழைத்த மான்” கதையிலிருந்து நீங்கள் அறிந்து கொண்ட நீதி யாது?
   ”ஆபத்தில் உதவும் நண்பனே உண்மையான நண்பன்”.

**சிந்தனை வினா:**

நமக்கு நண்பர்களாக இருப்பவர்களிடம் என்னென்ன நற்குணங்கள் இருக்க வேண்டும் பட்டியலிடுக.

| | |
|---|---|
| அன்பு | இரக்கம் |
| உண்மை | சினம் கொள்ளாமை |
| நல்லொழுக்கம் | ஈகை குணம் |
| மனித நேயம் | சகிப்புத் தன்மை |

**செயல்திட்டம்:**

ஆபத்தில் உதவுபவனே உண்மையான நண்பன் என்ற கருத்தை மையப்பொருளாகக் கொண்டு உங்கள் கற்பனையில் கதை ஒன்று எழுதி வருக.

## இயல் மூன்று - கற்கண்டு (இலக்கணம்)

### சொற்றொடர் அமைப்பு முறை

**வினா - விடை:**

1. எழுவாய் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
   ஒரு தொடரில் யார், எது, எவை, யாவர் என்னும் வினாக்களுக்கு விடையாக வரும் சொல்லே எழுவாய் ஆகும்.
   **எ.கா:** தென்றல் நடனம் ஆடினாள் - இதில் தென்றல் என்பது எழுவாய் ஆகும்.

2. செயப்படுபொருள் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
   ஒரு தொடரில் யாரை, எதனை, எவற்றை என்னும் வினாக்களுக்கு விடையாக வரும் சொல்லே செயப்படு பொருள் ஆகும்.

3. பயனிலை என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக.
   ஒரு தொடரில் அமைந்துள்ள வினைமுற்றை பயனிலை என்பர்.
   எ.கா: தென்றல் நடனம் ஆடினாள் - இதில் ஆடினாள் என்பது பயனிலை.